# பரீட்சகரின் அறிக்கை

## மட்டம் I பரீட்சை – 2026 சனவரி

## (104) வணிகச் சூழல்

பெரும்பாலும் வணிகச் சூழலின் அனைத்துப் பாடப் பரப்புகளையும் குறிப்பாக மட்டம் 1 இற்கான பாடப் பரப்புகளை இவ்வினாத்தாள் உள்ளடக்கியிருந்தது. பாடப்பரப்பு தொடர்பான பரீட்சார்த்திகளின் ஒட்டுமொத்த அறிவையும் புரிதலையும் பரீட்சிப்பதே இதன் நோக்கமாக இருந்தது. மொத்தத்தில், அதிகளவான பரீட்சார்த்திகளின் செயலாற்றுகை திருப்திகரமாக இருந்த அதே வேளை ஏனையோர் நன்றாக விடையளிக்கத் தவறியிருந்தனர். பரீட்சார்த்திகள் வினாத்தாளுக்கு எவ்வாறு விடையளித்துள்ளனர் என அவதானிக்கும்போது, வினாக்களைப் புரிந்து கொள்வதில் ஏற்படும் சிக்கல்களைத் தடுப்பதும் போதுமான புள்ளிகளைப் பெறுவதற்கு உகந்தவாறு விடையளிப்பதும் முக்கியமானது என உணரப்பட்டது.

## பகுதி A

### வினா இல. 01

இந்தப் பகுதியில், வணிகச் சூழல் பற்றிய பாடத்தின் ஒட்டுமொத்த பாடப் பரப்பும் உள்ளடக்கப் பட்டிருந்ததுடன் பெரும்பாலும் அனைத்துப் பரீட்சார்த்திகளும் இவ்வினாவுக்கு விடை அளித்திருந்தனர். பெரும்பாலான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு உயர்ந்தளவு புள்ளிகளைப் பெற்றிருந்தனர். அதிகளவான பரீட்சார்த்திகள் **1.1, 1.4, 1.8, 1.16, 1.17** ஆகிய வினாக்களுக்கு வெற்றிகரமாக விடை அளித்திருக்கவில்லை. வினாக்கள் தொடர்பான அவதானிப்புகள் கீழே தரப்பட்டுள்ளன :

**1.1** வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனி ஒன்றிலுள்ள அதிகபட்ச பங்குதாரர்களின் எண்ணிக்கை பற்றிய புரிதல் பரீட்சார்த்திகளிடம் காணப்படவில்லை. அவர்கள் 50 இனைக் குறிப்பிடுவதற்குப் பதிலாக 20 எனக் குறிப்பிட்டிருந்தனர்.

**1.4** அதிகளவான பரீட்சார்த்திகள் பணச் சந்தையில் பயன்படுத்தப்படாத கருவியை அடையாளங் கண்டிருக்கவில்லை. அவர்கள் ‘‘திறைசேரி முறிகள் (3)’’ என்ற விடைக்குப் பதிலாக திறைசேரி உண்டியல்கள் என விடையளித்திருந்தனர்.

**1.8** வெற்றுப் புறக்குறிப்பு பற்றி பரீட்சார்த்திகளிடம் புரிதல் காணப்படாததால் சரியான விடையான இல. (3) இற்குப் பதிலாக விடை இல. (4) ஐத் தெரிவு செய்திருந்தனர்.

**1.16** பெரும்பாலான பரீட்சார்த்திகள் ‘‘முறைசார் அமைப்பு’’ பற்றி விளக்கியிருந்த போதிலும், அவர்கள் உதாரணத்தை வழங்கியிருக்கவில்லை. இதனால் 2 இல் 1 புள்ளியையே பெற்றிருந்தனர்.

**1.17** ஒரு சிறு எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகள் நல்ல பணத்தின் பண்புகளை அடையாளங் கண்டிருக்கவில்லை. அவர்கள் நல்ல பணத்தின் தொழிற்பாடுகளை விடையாக எழுதியிருந்தனர். புள்ளிகளைப் பெற்றிருந்த பரீட்சார்த்திகள் பொதுவாக பொது ஏற்பனவு, பிரிபடும் தன்மை, நீடித்திருக்கும்தன்மை, இலாபத்தன்மை போன்றவற்றைக் குறிப்பிட்டிருந்தனர்.

எவ்வாறாயினும், மேற்படி வினாக்களைத் தவிர, அதிகளவான பரீட்சார்த்திகள் இப்பிரிவுக்கு நன்றாக விடை அளித்திருந்தனர்.

**மொத்தத்தில், இவ்வினாவுக்கான செயலாற்றுகை திருப்தியான மட்டத்தில் இருந்தது.**

## <u>பகுதி B</u>

இந்தப் பகுதி 4 கட்டாய வினாக்களைக் கொண்டிருந்தது. ஒவ்வொரு வினாவுக்கும் 10 புள்ளிகள் வீதம் வழங்கப்பட்டன.

### வினா இல. 02

இவ்வினா ''தனியுடமை வியாபாபாரம்'', ''பங்குடமை'', ''பரிப்பு வரையறுக்கப்பட்ட கம்பனி'' போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டிருந்தது.

**(a)** இங்கு, **டீ.கே. ஜூஸ் பார்** இனை ஒரு வணிகமாக வகைப்படுத்த முடியுமா என்பதை விபரிக்குமாறு கேட்கப்பட்டது. அதிகளவான பரீட்சார்த்திகள் இதனை ஒரு பங்குடமை வியாபாரமாக அடையாளங் கண்டிருந்தனர். எவ்வாறாயினும், சில பரீட்சார்த்திகள் இதனைப் பொதுவாக ஒரு வணிக அமைப்பாக அடையாளங் கண்டிருந்த அதே வேளை தரப்பட்ட சூழ்நிலைக்கான பண்புகளைத் தொடர்புபடுத்தியதைவிட அதன் பண்புகளை விவரித்திருந்தனர்.

**(b)** அதிகளவான பரீட்சார்த்திகள் ஒரு பங்குடமை வியாபாரத்திற்கும் ஒரு தனியுடமை வியாபாரத்திற்கும் இடையேயான வேறுபாட்டைச் சரியாகக் குறிப்பிட்டிருந்தனர்.

**(c)** பரீட்சார்த்திகள் பொதுவாக ஒரு பங்குடமை வியாபாரத்தை பரிப்பு வரையறுக்கப்பட்ட தனியாருடன் ஒப்பீடு செய்து, அதன் அனுகூலங்களை ஓர் எளிமையான வகையில் விவரித்திருந்தனர். எவ்வாறாயினும், ஒரு சிறிய எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகள் வினாவைச் சரியாக வாசிக்காது அதனை ஒரு தனியுடமை வியாபாரத்துடன் ஒப்பீடு செய்திருந்தனர்.

**மொத்தத்தில், இவ்வினாவுக்கான செயலாற்றுகை திருப்தியான மட்டத்தில் இருந்தது.**

### வினா இல. 03

**(a)** பரீட்சார்த்திகள் பல்வேறு வகையான காப்புறுதிகளை முன்வைத்திருந்தனர். எவ்வாறாயினும், சில பரீட்சார்த்திகள் ஆயுள் காப்புறுதி மற்றும் ஆதனக் காப்புறுதி ஆகிய இரண்டு பிரதான காப்புறுதி வகைகளைக் குறிப்பிட்டு விடையளித்திருந்தனர். இவ்வினா அவர்களின் பொது அறிவைப் பயன்படுத்தி விடையளிக்கக்கூடிய வினாவாகும்.

**(b)** அதிகளவான பரீட்சார்த்திகள் காப்புறுதிக் கோட்பாடுகளைச் சரியாகக் குறிப்பிட்டிருந்தனர். இழப்பீட்டுத் தத்துவம், அண்மைக் காரணம், மீயுயர் நன்னம்பிக்கை மற்றும் காப்புறுத்தத்தக்க நாட்டம் போன்றவற்றைக் குறிப்பிட்டுப் புள்ளிகளைப் பெற்றிருந்தனர்.

**(c)** பரீட்சார்த்திகள் இரண்டு அம்சங்களை கலந்துரையாடியதன் மூலம் இவ்வினாவுக்கு விடை அளித்திருந்தனர்:

- வணிகங்களுக்கு காப்புறுதியின் முக்கியத்துவம்.
- பொருளாதார அபிவிருத்திக்கு காப்புறுதியின் முக்கியத்துவம்.

எவ்வாறாயினும், பரீட்சார்த்திகளின் காப்புறுதியின் முக்கியத்துவம் பற்றிய நடைமுறை அறிவு ஒப்பீட்டு ரீதியில் குறைவாகவே உள்ளது என பரீட்சகர்கள் நம்புகின்றனர்.

**மொத்தத்தில், இவ்வினாவுக்கான செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் காணப்பட்டது.**

### வினா இல. 04

இவ்வினா ஏற்றுமதி வர்த்தகத்தில் ஈடுபடும் ஒரு கம்பனியை அடிப்படையாகக் கொண்டிருந்தது. இவ்வினா ஆதரவுச் சேவைகளில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏற்பாட்டியல் சேவைகள் (logistic services) பற்றிப் பரீட்சித்திருந்தது.

**(a)** அதிகளவான பரீட்சார்த்திகள், பயனுறுதிமிக்க ஏற்பாட்டியல் முறைமை தொடர்பில் கவனத்திற் கொள்ள வேண்டிய காரணிகளைச் சரியாகவும் நடைமுறை ரீதியாகவும் குறிப்பிட்டிருந்தனர். பரீட்சார்த்திகள் வழங்கிய சரியான விடைகளில் போக்குவரத்து, செலவு, களஞ்சியப்படுத்தல், பொதியிடல், இருப்பு முகாமைத்துவம் போன்றவை அடங்குகின்றன.

**(b)** இந்தப் பகுதி, விநியோக முறைமையைச் சரியாக முகாமை செய்யாதுவிடின், விநியோகத்தில் ஏற்படக்கூடிய பிரதிகூலங்கள் பற்றிய பரீட்சார்த்திகளின் நடைமுறைப் புரிதலைப் பரீட்சித்திருந்தது. அதிகளவான பரீட்சார்த்திகள் பல்வேறு கண்ணோட்டங்களில் இருந்து இந்தப் பகுதிக்கு விடையளித்திருந்தனர். பெரும்பாலானவர்கள் ‘‘இலாபங்களின் இழப்பு’’, ‘‘நற்பெயர் இழப்பு’’, சட்டச் செலவுகளின் அதிகரிப்பு’’ போன்றவற்றை விபரித்திருந்தனர்.

**(c)** இங்கு சர்வதேச வர்த்தகத்தின் கீழ், ‘‘ஒருதலைப்பட்ச வர்த்தக உடன்படிக்கை’’ என்பதை விபரிக்குமாறு கேட்கப்பட்டது. சிறிய எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகள் மாத்திரமே சரியான விடை அளித்திருந்தனர்.

**மொத்தத்தில், இவ்வினாவுக்கான செயலாற்றுகை திருப்தியான மட்டத்தில் இருந்தது.**

**வினா இல. 05**

இவ்வினா SME-கள் மற்றும் நிறுவன ஆளுகையை அடிப்படையாகக் கொண்டிருந்தது.

**(a)** இலங்கையின் SME ஒன்றாக தரப்பட்ட நிறுவனத்தின் செயலாற்றுகையை எவ்வாறு மேம்படுத்தலாம் என்பதற்கான மூன்று வழிமுறைகளைக் குறிப்பிடுமாறு இவ்வினாவில் கேட்கப்பட்டது. இது பரீட்சார்த்திகள் தமது பொது அறிவைக் கொண்டு விடையளிக்கக்கூடிய வினாவாகும். எவ்வாறாயினும், சிறிய எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகள் மாத்திரமே குறிப்பான விடைகளை அளித்திருந்தனர்.

**(b)** அதிகளவான பரீட்சார்த்திகள் நடைமுறை அம்சங்களைக் கவனத்திற் கொண்டு, அரசாங்கம் வணிகங்களில் செல்வாக்குச் செலுத்தும் வழிமுறைகளை வெற்றிகரமாக விபரித்திருந்தனர்.

**(c)** நான்கு பிரதான துறைகளின் கீழ், நாட்டதாரர்களை நோக்கிய சமூகப் பொறுப்பை நிறைவேற்றுவது பற்றிய பரீட்சார்த்திகளின் வெளிப்படுத்தல் அறிவை இப்பகுதி பிரதானமாக எதிர்பார்த்தது. சிறிய எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகள் முழுமையான சரியான விடைகளை அளித்திருக்கவில்லை.

பெரும்பாலானவர்கள் பாடப்புத்தகத்தின்படி, எதிர்பார்க்கப்பட்ட விடைகளை ஒத்த விடைகளை வழங்கியிருந்தனர்.

**மொத்தத்தில், இவ்வினாவுக்கான செயலாற்றுகை திருப்தியான மட்டத்தில் இருந்தது.**

## <u>பகுதி C</u>

**வினா இல. 06**

இவ்வினா வேளாண் வணிகத்தில் ஈடுபட்டுள்ள ஒரு கம்பனி பலதரப்பட்ட சவால்களுடன் ஏற்றுமதி வணிகத்தை ஆரம்பிப்பது தொடர்பில் தரப்பட்ட விவரணத்தை அடிப்படையாகக் கொண்டிருந்தது. சந்தையில் நிறுவனத்தின் பலம், வாய்ப்புகள் பற்றியும் நிறுவனம் உள்ளக ரீதியாகவும் வெளிப்புற ரீதியாகவும் எதிர்கொள்ளும் சவால்கள் பற்றியும் ஏராளமான தரவுகள் தரப்பட்டிருந்தன.

**(a)** இங்கு, SWOT பகுப்பாய்வைப் பயன்படுத்தி வணிகச் சூழலை மதிப்பிடுமாறு கேட்கப்பட்டது. பெரும்பாலான மாணவர்கள் விவரணத்திலிருந்து SWOT காரணிகளைச் சரியாக அடையாளங் கண்டு, புள்ளிகளைப் பெற்றிருந்தனர்.

**(b)** உலகளாவிய வணிகச் சூழலானது நிறுவன வணிகத்தில் தாக்கம் செலுத்தும் வழிமுறைகளை விபரிக்குமாறு இங்கு கேட்கப்பட்டிருந்தது. அதிகளவான பரீட்சார்த்திகள் இவ்விவரணத்துடன் தொடர்புடைய விடைகளை வழங்கியிருந்தனர். பெரும்பாலும் சராசரி எண்ணிக்கையிலான மாணவர்கள் சரியான விடைகளை அளித்திருந்த போதிலும், சிலர் உலகளாவிய சூழல் எவ்வாறு வணிகத்தில் தாக்கம் செலுத்துகிறது என்பது தொடர்பான தெளிவான புரிதலைக் கொண்டிருக்கவில்லை. பெரும்பாலானவர்கள் உலகமயமாதலின் பொதுவான தாக்கத்தை மாத்திரம் குறிப்பிட்டிருந்த அதே வேளை சில விடயங்கள் இவ்வினாவுடன் தொடர்புடையதாக அமையவில்லை.

**(c)** இங்கு போக்குவரத்து முறைமையின் மூலகங்களைக் குறிப்பிடுமாறு கேட்கப்பட்டிருந்தது. பெரும்பாலானவர்கள் சரியாக விடையளித்து புள்ளிகளைப் பெற்றிருந்தனர். எவ்வாறாயினும், சில பரீட்சார்த்திகள் வினாவை வாசித்து சரியாக விளங்கிக் கொள்ளாது, போக்குவரத்து முறைமையின் அனுகூலங்களைக் குறிப்பிட்டிருந்தனர்.

**(d)** பரீட்சார்த்திகள் தரப்பட்ட நிறுவனத்திற்கு பயனுறுதிமிக்க போக்குவரத்து முறைமை ஒன்றின் அனுகூலங்களைச் சரியாகக் குறிப்பிட்டிருந்தனர். பெரும்பாலான பரீட்சார்த்திகள் புள்ளிகளைப் பெற்றிருந்தனர்.

**(e)** பெரும்பாலான பரீட்சார்த்திகள் தொழில்முனைவின் சமூக, பொருளாதார நன்மைகளைச் சரியாக விவரித்திருந்த அதே வேளை மிகச் சிலர் அந்தப் பாடப்பரப்பில் போதிய தெளிவின்றி விடைகளை அளித்திருந்தனர்.

**மொத்தத்தில், இவ்வினாவுக்கான செயலாற்றுகை திருப்தியான மட்டத்தில் இருந்தது.**

\- - -

**<u>பரீட்சார்த்திகளின் விளங்கிக்கொள்ளும் மட்டத்தை விருத்தி செய்வதில் கவனம் செலுத்த வேண்டிய பொதுவான விடயங்கள்:</u>**

(1) பரீட்சார்த்திகள் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு முன்னர் சம்பந்தப்பட்ட பாடப்புத்தகங்களை படித்தல் வேண்டும்.

(2) கடந்தகால வினாத்தாள்களுக்கு விடையளித்து பயிற்சி பெறுவதும் உரிய வினாத்தாள்களுடன் இணைக்கப்பட்டுள்ள வரைவிலக்கணங்களுடன்கூடிய செயல் வினைச்சொல் செவ்வை நிரலுக்கேற்ப விடையளித்து பயிற்சி பெறுவதும் மிகவும் முக்கியமானதாகும்.

(3) மாணவர்கள் வினாக்களுக்கு விடையளிப்பதற்கு முன்னர் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களையும் வினாக்களையும் கவனமாக வாசித்தல் வேண்டும்.

(4) விடைகளை வினாத்தாளிலேயே எழுதி அதனை விடைத்தாள்களுடன் அனுப்ப வேண்டாம்.

(5) கட்டாயமாக விடையளிக்கப்பட வேண்டிய வினாக்களை கைவிட எத்தனிக்க வேண்டாம். இது குறைந்த புள்ளிகளையே பெறுவதற்கு வழிவகுக்கும்.

(6) அறிவை நிகழ்நிலைப்படுத்துவதற்கு அண்மையில் வெளியான இதழ்கள், கையேடுகள், பத்திரிகைகள் மற்றும் பாடப் புத்தகங்களைப் பயன்படுத்தவும்.

(7) புதிய வினாவுக்கு விடையளிக்க ஆரம்பிக்கும்போது ஒரு புதிய பக்கத்தைப் பயன்படுத்தவும்.

\- * * * -